Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTU
CC NO. **276/2020``**
**Depostitions of PW- 4 Witness for**

| | |
|---|---|
| Name | தமிழரசன் |
| Father's name | செல்வம் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of December 2023.

Signature of Witness.

<u>05.12.2023</u>

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**<u>முதல் விசாரணை–</u>**

நான் தற்போது திருவில்லிபுத்தூரில் ரைட்டன்பட்டி தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் எஸ்டி கொரியர் வைத்து வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். 26.11.2019 ம்தேதி காலை 10 மணியளவில் நானும் எனது நண்பர் ஆஞ்சேயும் சிவகாசி ரோட்டிலுள்ள ஆர்.சி.சர்ச் முன்னால் உள்ள டீ கடையில் டீ குடித்துக்கொண்டிருந்தோம். அப்போது திருவில்லிபுத்துர் நகர் போலிசும் பெண் காவலருடன் அ ங்கு ரோந்து வந்தார்கள். அப்போது ஒரு பெண் அங்குமிங்குமாக ரோட்டில் போய்க்கொண்டிருந்தார். அப்போது எங்கள்

முன்னிலையில் போலிசார் அந்த பெண்ணை பிடித்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது போலிசிடம் அந்த பெண் தன் பெயர் மணிமாலா என்றும் அவரது பர்சில் வைத்திருந்த தங்க செயினை போலிசிடம் எடுத்து ஒப்படைத்தார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள செயினை தான் மணிமாலா போலிசாரிடம் ஒப்படைத்தார். மணிமாலா என்பவரை பார்த்தால் அடையாளம் காட்டமுடியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜரில்லை. போலிசார் என்னிடமும் ஆஞ்சேயிடமும் சாட்சியாக கையெழுத்து கேட்டார்கள் நாங்கள் கையெழுத்து போட்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள், ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.3 ஆகவும் அத்தாட்சி அசாஆ.4 ஆகவும் குறியிடு செய்யப்படுகிறது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.